**வலப்பனை பிரதேச சபை**
**நுவரெலிய மாவட்டம்**

-------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர,நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வலப்பனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,771,310 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,513,710 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 1,257,600 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படாத 03 நிர்மாணங்களுக்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு நிர்மாண வேலைக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,500,000 கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் மூலதனச் செலவினம் அப் பெறுமதியால் அச் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பொது நூலகத்திற்காக உள்ளுராட்சி மன்ற திணைக்களத்தின் மூலம் ஆண்டினுள் வழங்கப்பட்டிருந்த ரூபா 27,085 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலகப் புத்தகங்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு ரூபா 27,085 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 20,094 ஆன நானாவித வைப்புக்கள் மீளக் கொடுப்பனவு செய்யும் போது அப்பணம் நானாவித வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் கடன்கொடுத்தோர் கணக்கு வரவு வைத்ததை சீராக்குவதற்காக மீளாய்வாண்டின் நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 20,094 ஆல் வரவு வைக்கப்பட்டு நானாவித வைப்புக் கணக்கு அப்பெறுமதியால் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 40,188 அல் குறைத்தும் நானாவித வைப்புக்கள் அப்பெறுமதியால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ரூபா 537,587 பெறமதியான 190 கொம்போஸ்ட் தொட்டிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொட்டிகள் 2016 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டதால் அவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள இருப்பு மற்றும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 31,811,275 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 26,640,482 என ரூபா 5,170,793 ஆல் குறைந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மூலதனச் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களுக்காக கிடைக்க வேண்டிய தொகை ரூபா 31,811,275 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 34,215,589 என ரூபா 2,404,314 கூடுதலாக காண்பிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் மற்றும் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கந்தபொல ஹைபொரஸ்ட் தோட்டக் கோவிலுக்கு அருகில் வீதி மற்றும் பாலம் அபிவிருத்திக்காக செலுத்த வேண்டிய தொகை ரூபா 373,000 ஆக இருந்த போதிலும் இப் பெறுமதி ரூபா 37,500 என ரூபா 335,500 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) உட புஸ்ஸல்லாவ எனிக்தோட்ட வீதியின் சிறிய பாலமொன்றை அமைக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 50,000 ஆக இருந்த போதிலும் செயற்திட்டத்தின் மொத்த பெறுமதியான ரூபா 500,000 கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்தமையால் ரூபா 450,000 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) ''ஏனைய'' – லிடஸ் டேல் தோட்ட வீதி அபிவிருந்தி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 47,850 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 430,631 என ரூபா 382,781 கூடுதலாகவும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 47,850 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 430,631 என ரூபா 382,781 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஹைபொரஸ்ட் 03 ஆம் இலக்க பகுதி தோட்ட வீதி நிர்மாணச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய தொகை ரூபா 48,925 ஆக இருந்த போதிலும் அத்தொகை ரூபா 489,320 என ரூபா 440,395 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இச் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 48,925 ஆக இருந்த போதிலும் அத் தொகை கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட 08 ஏனைய நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,740,879 ஆக இருந்த போதிலும் அப் பெறுமதி ரூபா 3,621,286 என ரூபா 119,593 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் பிரகாரம் கணக்கின் மீதிகள் மற்றும் பயன்பாட்டுப் பதிவேட்டின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 974,755 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.3.3.1 பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 24,306,643 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,400,589 தொகை ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

**1.3.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 33,759,022 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 8,066,011 தொகை ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்தது.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 26,569,100 ஆன 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

பிரதேச சபையில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, சேவையை வரிதாக்கிய மற்றும் மரணித்த 18 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 149,297 ஆன கடன் தொகை தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,929,981 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 10,762,074 ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது இணக்கமின்மைகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| | வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 2,312,974 | 2,449,170 | 1,851,807 | 1,517,888 | 2,275,419 | 2,433,274 | 1,828,321 | 1,918,106 |
| (ii) | வாடகைகள் | 6,128,000 | 4,617,855 | 3,976,260 | 3,142,146 | 1,660,000 | 2,555,585 | 2,163,617 | 3,294,550 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,404,000 | 3,588,348 | 3,588,348 | - | 2,130,000 | 3,162,777 | 3,162,777 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,491,000 | 7,306,295 | 4,659,530 | 3,549,712 | 7,669,000 | 12,153,915 | 7,021,272 | 5,132,643 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

(அ) பிரதேச சபைக்கு சொந்தமான 05 கடைகளை வாடகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகையாளர்களால் 05 மாதங்கள் முதல் 62 மாதங்கள் வரையான காலப்பகுதி முதல் வாடகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந் நிலுவை வாடகை ரூபா 560,660 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 50,000 ஆன வாடகை 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயற்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

2017 ஆம் ஆண்டில் 1000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 985,420 பெறுமதியான 03 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தோட்ட வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 பெறுமதியான செயற்திட்டமொன்றும் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக பிரதேச சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அது தொடர்பில் எந்தவொரு செயற்பாடும் மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம். சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டிருந்த 20 வியாாரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையின் தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் வாடகை அடிப்படையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளிலிருந்து 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் ரூபா 150 ஆன கட்டணமொன்று அறவிடப்படுவதாக 2016 நவம்பர் 11 ஆந் திகதிய 1993 ஆம் இலக்க வர்த்தமானி அபிவிருத்தி மூலம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 மார்ச் 17 ஆந் திகதிய மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் மப/உ.ம.ஆ/2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பிரகாரம் கடைகளுக்கான மதிப்பிடப்பட்ட மாதாந்த வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் 19 கடைகள் தொடர்பாக வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

1988 இன் மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வீதவரிக்காக ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தப்பட வேண்டிய போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆதனங்கள 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பும் திருத்த வேலைகள் செய்யப்படாமை

(அ) நில்தண்டஹின்ன உப அலுவலகத்தின் மின் வழங்கல் ஒராண்டு காலமாக துண்டிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே 11 ஆந் திகதி வரையிலும் மீள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நில்தண்டஹின்ன பொது நூலகத்தின் மின் வழங்கல் ஒராண்டு காலமாக துண்டிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே 11 ஆந் திகதி வரையிலும் மீள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நில்தண்டஹின்ன பொது நூலகம் நீண்ட காலமாக திருத்த வேலைகள் செய்யப்படாதிருந்ததுடன் மழை நீர் நூலகத்திற்குள்ளே கசிவதால் நூலகத்தின் உட்கூரை சிதைவடைந்திருந்ததுடன் மழை நீர் காரணமாக நூலகத்தின் வாசிப்பு மேசை மற்றும் கதிரைகளுக்கு சேதம் ஏற்பட்டிருந்தன.

#### 3.4.2 கையேற்கப்படாத சொத்துக்கள்

பிரதேச தலைமை அலுவல நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள காணியின் உரித்து சபைக்குக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் 15 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையும் 07 செலவின விடயங்களில் 17 சதவீதம் முதல் 211 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

-----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-------------------------------------------------------------------

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| வருமானம் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் | பழைய மீதிகளை தீர்வு செய்யாமை. |
| சொத்துக்கள் | பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் செய்யப்படாமை. |
| இருப்பு | இருப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை. |